# ஜல்லிக்கட்டுக்குத் தடை இல்லை

## தமிழக அரசின் திருத்தச் சட்டம் செல்லும்: உச்சநீதிமன்றம் தீர்ப்பு

**புது தில்லி, மே 18:** தமிழகத்தின் பாரம்பரிய விளையாட்டான ஜல்லிக்கட்டுக்குத் தடை விதிக்க முடியாது எனத் தெரிவித்த உச்சநீதிமன்ற அரசியல்சாசன அமர்வு, இந்த விவகாரத்தில் தமிழக அரசின் திருத்தச் சட்டம் செல்லும் என்றும் ஒருமனதாகத் தீர்ப்பளித்துள்ளது.

ஜல்லிக்கட்டு நிகழ்வில் மாடுகள் துன்புறுத்தப்படுவதாகக் கூறி விலங்குகள் நல ஆர்வலர்கள் சிலரும், பீட்டா உள்ளிட்ட அமைப்புகளும் உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தனர். அவற்றை விசாரித்த உச்சநீதிமன்றம் ஜல்லிக்கட்டுக்கு 2014-ஆம் ஆண்டில் தடை விதித்தது.

அதையடுத்து, ஜல்லிக்கட்டுக்கு அனுமதி பெறும் நோக்கில் விலங்குகளைத் துன்புறுத்துவதற்குத் தடை விதித்து மத்திய அரசு 1960-ஆம் ஆண்டு இயற்றிய சட்டத்தில் தமிழக அரசு 2017-இல் திருத்தங்களை மேற்கொண்டது. அந்தச் சட்டத் திருத்தத்துக்கு குடியரசுத் தலைவர் ஒப்புதல் அளித்தார். அதைத் தொடர்ந்து, ஆண்டுதோறும் தமிழகத்தில் ஜல்லிக்கட்டு நடத்தப்பட்டு வருகிறது.



### கம்பளா, மாட்டு வண்டி பந்தயங்களுக்கும் அனுமதி

ஜல்லிக்கட்டுக்கு அனுமதி வழங்கி தமிழக அரசு திருத்தச் சட்டத்தை இயற்றியதைப் போல, 'கம்பளா' எனும் எருமை பந்தயத்துக்கு அனுமதி வழங்கி கர்நாடக

### தமிழக அரசுக்கு மகத்தான வெற்றி

**சென்னை, மே 18:** ஜல்லிக்கட்டு போட்டிகளை நடத்தத் தடையில்லை என்ற உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு, தமிழக அரசு நடத்திய சட்டப் போராட்டத்துக்கு கிடைத்த மகத்தான வெற்றி என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.



அவர் ட்விட்டரில் வியாழக்கிழமை வெளியிட்ட பதிவு:

தமிழர்தம் வீரத்தையும் பண்பாட்டையும் வெளிப்படுத்தும் விளையாட்டே ஜல்லிக்கட்டு. இந்தப் போட்டிகளை நடத்தத் தடையில்லை என்று உச்ச நீதிமன்றத்தின் அரசியல் சாசன அமர்வு தீர்ப்பு அளித்திருப்பது தமிழக வரலாற்றில் பொன்னெழுத்துகளால் பொறிக்கத்தக்கது.

தமிழக அரசு கொண்டுவந்த அவ

EVA STALIN

இதனிடையே, ஜல்லிக்கட்டுக்கு அனுமதி அளித்த தமிழகத்தின் திருத்தச் சட்டத்துக்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் பீட்டா மனு தாக்கல் செய்தது. அதை விசாரித்த இரு நீதிபதிகளைக் கொண்ட அமர்வு, வழக்கை 5 நீதிபதிகளைக் கொண்ட அரசியல்சாசன அமர்வுக்கு 2018-ஆம் ஆண்டில் மாற்றியது.

**முக்கிய கேள்விகள்:** 'தமிழக அரசின் திருத்தச் சட்டமானது, விலங்குகள் மீதான துன்புறுத்தலுக்கு வழிவகுக்கிறதா?', 'அச்சட்டம் அரசமைப்புச் சட்டத்தின் 7-ஆவது அட்டவணைக்கு உள்பட்டதா?', 'பாரம்பரிய நிகழ்வு என்ற பெயரில், அரசமைப்புச் சட்டத்தின் 29-ஆவது பிரிவின் கீழ் அச்சட்டத்துக்குப் பாதுகாப்பு கோர முடியுமா?' உள்ளிட்ட கேள்விகளுக்கு அரசியல்சாசன அமர்வு விடை காண வேண்டும் என்றும் உச்சநீதிமன்றம் தெரிவித்திருந்தது.

அதையடுத்து, இந்த விவகாரம் தொடர்பான விசாரணை, நீதிபதிகள் கே.எம்.ஜோசஃப், அஜய் ரஸ்தோகி, அனிருத்தா போஸ், ரிஷிகேஷ் ராய், சி.டி.ரவிகுமார் ஆகியோரைக்கொண்ட அரசியல்சாசன அமர்வில் நடைபெற்றது. அனைத்து தரப்பு வாதங்களும் நிறைவடைந்த பிறகு, வழக்கின் தீர்ப்பை நீதிபதிகள் கடந்த ஆண்டு டிசம்பர் 8-ஆம் தேதி ஒத்திவைத்திருந்தனர். இந்நிலையில், இந்த வழக்கின் தீர்ப்பை நீதிபதிகள் வியாழக்கிழமை வழங்கினர்.

**திருத்தச் சட்டம் செல்லும்:** ஜல்லிக்கட்டுக்கு அனுமதி வழங்கிய தமிழக அரசின் திருத்தச் சட்டம் செல்லும் என நீதிபதிகள் ஒருமனதாகத் தீர்ப்பு வழங்கினர். தீர்ப்பின் முக்கிய விவரங்களை நீதிபதி அனிருத்தா போஸ் வாசித்தார். அதில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

அரசமைப்புச் சட்டத்தின் 7-ஆவது அட்டவணையில் இடம்பெற்றுள்ள பொதுப் பட்டியலின் 17-ஆவது உள்பிரிவான 'விலங்குகளைத் துன்புறுத்தத் தடை' என்பதுடன் தமிழக அரசின் திருத்தச் சட்டம் பொருந்துகிறது. அந்தச் சட்டமானது ஜல்லிக்கட்டு நிகழ்வில் விலங்குகள் துன்புறுத்தப்படுவதைப் பெருமளவில் குறைக்கிறது.

தமிழக அரசு தாக்கல் செய்த பல்வேறு ஆவணங்களின் அடிப்படையில், ஜல்லிக்கட்டானது கடந்த சில நூற்றாண்டுகளாக நடைபெற்று வருவதை நீதிமன்றம் ஏற்கிறது. ஆனால், ஜல்லிக்கட்டானது தமிழக கலாசாரத்துடனும், பாரம்பரியத்துடனும் ஒருங்கிணைந்ததா என்பதை விரிவாக ஆராய வேண்டியுள்ளது. அதை நீதிமன்றம் செய்ய முடியாது.

**சட்டப் பேரவைக்கே அதிகாரம்:** கலாசாரத்தைப் பாதுகாக்கும் நோக்கிலேயே தமிழக அரசு திருத்தச் சட்டத்தை இயற்றியதாகக் கூறும் விவகாரம் விவாதத்துக்கு உரியது. அதை சட்டப் பேரவையில் மட்டுமே விவாதித்து தீர்மானிக்க முடியும். அதை நீதிமன்ற விசாரணைக்கு உள்படுத்த முடியாது.

ஜல்லிக்கட்டு தமிழகத்தின் பாரம்பரியத்துடன் ஒருங்கிணைந்தது என மாநில அரசு ஏற்கெனவே சட்டத்தை இயற்றியுள்ளது.

மாநில சட்டப் பேரவையின் அந்தக் கண்ணோட்டத்தில் தலையிட நீதிமன்றம் விரும்பவில்லை.

ஜல்லிக்கட்டுக்கு அனுமதி வழங்கும் நோக்கில் தமிழக அரசு இயற்றிய திருத்தச் சட்டத்துக்கு குடியரசுத் தலைவர் ஒப்புதல் வழங்கியுள்ளார். மாநில அரசின் இந்தச் செயல்பாட்டில் எந்தத் தவறும் காண முடியாது.

**மாவட்ட நிர்வாகமே பொறுப்பு:** அதே வேளையில், தமிழக அரசின் திருத்தச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சட்டவிதிகளை உரிய முறையில் நடைமுறைப்படுத்த வேண்டிய பொறுப்பு மாவட்ட நிர்வாகத்துக்கு உள்ளது. அந்தச் சட்டவிதிகளை அதிகாரிகள் முறைப்படி நடைமுறைப்படுத்த வேண்டும் எனத் தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசும், மாட்டு வண்டி பந்தயங்களுக்கு அனுமதி அளித்து மகாராஷ்டிர அரசும் திருத்தச் சட்டங்களை இயற்றின.

அவற்றுக்கு எதிராகவும் உச்சநீதிமன்றத்தில் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. ஜல்லிக்கட்டுடன் சேர்த்து, கம்பளா, மாட்டு வண்டி பந்தயங்களுக்கும் அனுமதி வழங்கி உச்சநீதிமன்ற அரசியல் சாசன அமர்வு தீர்ப்பளித்தது.

சரச் சட்டம் செல்லும் என்பதை நிலைநாட்ட அரசு நடத்திய சட்டப் போராட்டத்துக்கு மகத்தான வெற்றி கிடைத்துள்ளது.

அலங்காநல்லூரில் மாபெரும் ஜல்லிக்கட்டு மைதானத்தை நாம் கட்டி வருகிறோம். வரும் ஜனவரியில், தமிழர் திருநாளாம், பொங்கல் திருநாளில் ஜல்லிக்கட்டு வெற்றி விழாவைக் கொண்டாடுவோம் எனப் பதிவிட்டுள்ளார் அவர்.

## விலங்குகள் நல ஆர்வலர்கள் அதிருப்தி

ஜல்லிக்கட்டுக்கு அனுமதி வழங்கிய உச்சநீதிமன்றத் தீர்ப்புக்கு விலங்குகள் நல ஆர்வலர்கள் பலர் அதிருப்தி தெரிவித்துள்ளனர். பாரம்பரியம் என்ற பெயரில் அறநெறி தவறக் கூடாது என அவர்கள் தெரிவித்தனர். பல ஆண்டுகளாகத் துன்புறுத்தப்பட்டு வரும் விலங்குகளைக் காப்பதற்கான சட்ட நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என 'பீட்டா' தெரிவித்துள்ளது.

# லூபஸ் பாதிப்பு: உயர் சிகிச்சை மூலம் இளம்பெண்ணுக்கு மறுவாழ்வு

**சென்னை, மே 18:** லூபஸ் எனப்படும் பல்லுறுப்பு செஞ்சரும சிதைவு நோய்க்குள்ளான இளம் பெண்ணுக்கு உயர் சிகிச்சைகள் மற்றும் மருத்துவக் கண்காணிப்புகளை வழங்கி சென்னை காவேரி மருத்துவமனை மருத்துவர்கள் உயிர் காத்துள்ளனர்.

இது குறித்து காவேரி மருத்துவமனையின் செயல் இயக்குநர் டாக்டர் அரவிந்தன் செல்வராஜ் கூறியது:

உடலில் உள்ள வெள்ளை அணுக்கள், சில நேரங்களில் எதிர்விளைவு மாற்றங்களுக்கு உள்ளாகி நம் உயிருக்கே ஊறு விளைவிக்கக் கூடியவையாக உருவெடுக்கின்றன.

அவ்வாறு எதிர்விளைவு மாற்றங்களுக்கு உள்ளான வெள்ளை அணுக்கள், மூட்டு, ஜவ்வு பகுதிகளைத் தாக்கும்போது அது மூட்டு அழற்சிக்கு வழிவகுக்கிறது.

அதில் ஒரு வகையான பாதிப்புதான் பல்லுறுப்பு செஞ்சரும சிதைவு எனப்படும் நோய். உடலில் உள்ள இணைப்புத் திசுக்களில் ஏற்படும் பாதிப்பால் இத்தகைய பிரச்னை ஏற்படுகிறது.

இதை அலட்சியப்படுத்தினால் உடலின் ஒவ்வொரு உறுப்புகளும் செயலிழக்கக்கூடும். இந்த நிலையில், தீவிர காய்ச்சல், சுவாசிப்பதில் சிரமம், இருமல் மற்றும் உடல் வீக்கத்துடன் 32 வயது பெண் ஒருவர் அண்மையில் எங்களது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

லூபஸ் நோயாளியான அவர் தொடர்ந்து அதற்கான சிகிச்சையை எடுத்துக் கொள்ளததால் தீவிர பாதிப்புக்கு ஆளாகியிருந்தார்.

பரிசோதனையில் அவருக்கு மூளைக்குச் செல்லும் ரத்த நாளங்களில் வீக்கம், சிறுநீரக செயலிழப்பு, இதயத் தமனி பாதிப்பு, பக்கவாதத்துக்கான அறிகுறிகள் அனைத்தும் இருப்பது தெரிய வந்தது.

இதையடுத்து மருத்துவமனையின் மூட்டு, தசை, இணைப்புத் திசு சிகிச்சை நிபுணர் டாக்டர் சாம் சந்தானம் தலைமையிலான மருத்துவக் குழுவினர், அந்த பெண்ணுக்கு ஸ்டீராய்டு உள்பட எதிர்பாற்றல் குறைப்பு மருந்துகளையும், உயர் மருத்துவக் கண்காணிப்பையும் வழங்கினர்.

அதன் பயனாக அவர் பல்வேறு பாதிப்புகளில் இருந்து மீண்டு, தற்போது இயல்பு நிலைக்கு திரும்பியுள்ளார் என்றார் அவர்.

Activate Windows
Go to Settings to activate Windows.
EVA

# நாட்டின் பாரம்பரியத்தைக் காக்க மத்திய அரசு முன்னுரிமை: பிரதமர் மோடி

**புது தில்லி, மே 18:** நாட்டின் பாரம்பரியத்தைக் காக்க மத்திய அரசு முன்னுரிமை அளித்துள்ளதாக பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.

தில்லியில் உள்ள பிரகதி மைதானத்தில் சர்வதேச அருங்காட்சியக கண்காட்சியை அவர் வியாழக்கிழமை திறந்து வைத்தார். இதைத் தொடர்ந்து அவர் பேசியது:

இந்தியாவின் அருங்காட்சியக கலாசாரத்தில் இந்தக் கண்காட்சி திருப்புமுனையாக அமையும். இந்தியாவைச் சேர்ந்த புராதன கலைப்பொருள்கள் கடத்தப்பட்டு வெளிநாடுகளுக்குக் கொண்டு செல்லப்பட்டன. இந்தியாவின் கௌரவம் உலக அளவில் பெருகி வரும் நிலையில் பல்வேறு நாடுகளும் இந்தியாவுக்குச் சொந்தமான பாரம்பரிய கலைப்பொருள்களை திருப்பித் தர தொடங்கியுள்ளன.

வாராணசியில் இருந்து திருடப்பட்ட மா அன்னபூர்ணா சிலை நம் நாட்டுக்குத் திரும்பி வந்துள்ளது. அதேபோல குஜராத்தைச் சேர்ந்த மகிஷாசுரமர்த்தினி சிலை, சோழப் பேரரசு காலத்தில் செய்யப்பட்ட நடராஜர் சிலைகள், குரு ஹர்கோவிந்த் சிங்கின் பெயர் பொறிக்கப்பட்ட வாள் ஆகியவையும் நம் நாட்டுக்குத் திரும்ப வந்துள்ளன.

சுதந்திரத்துக்கு முன்னரும் பின்னரும் இந்தியாவில் இருந்து கலைப்பொருள்கள் நேர்மையற்ற முறையில் வெளிநாடுகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டன. இத்தகைய குற்றத்தைத் தடுத்து நிறுத்த நாம் இணைந்து பணியாற்ற வேண்டியுள்ளது.


நம் நாடு நூற்றுக்கணக்கான ஆண்டுகள் அடிமைப்பட்டுக் கிடந்தபோது நாட்டின் பாரம்பரியப் பொருள்களை இழந்தோம். புராதனமான ஓலைச்சுவடிகளும் நூலகங்களும் கொளுத்தப்பட்டன. இது இந்தியாவுக்கான இழப்பு மட்டுமின்றி ஒட்டுமொத்த உலகிற்கும் மனித குலத்துக்கும் இழப்பாகும்.

சுதந்திரத்துக்குப் பின்னர், நமது பாரம்பரியத்தைக் காப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படாதது வேதனை அளிக்கிறது. குடிமக்களுக்கும் அது தொடர்பான விழிப்புணர்வு இல்லை.

சுதந்திர அமுத காலத்தில் நாடு அடியெடுத்து வைத்துள்ள நிலையில் நான் ஐந்து தீர்மானங்களை வெளியிட்டுள்ளேன். அவற்றில் நமது பாரம்பரியத்தில் பெருமிதம் கொள்வதும் ஒன்றாகும். நாம் நமது பாரம்பரியத்தைப் பாதுகாப்போம்.

ஒவ்வொரு மாநில பாரம்பரியத்துடன் உள்ளூர் மற்றும் கிராமப்புற அருங்காட்சியகங்களைப் பாதுகாக்க மத்திய அரசு சிறப்பு பிரசார இயக்கத்தை நடத்தி வருகிறது.

நாட்டின் சுதந்திரப் போராட்டத்தில் பழங்குடியின சமூகத்தின் பங்களிப்பை நினைவுகூரும் வகையில் 10 சிறப்பு அருங்காட்சியகங்கள் கட்டப்பட்டு வருகின்றன என்றார்.




புது தில்லியில் வியாழக்கிழமை நடைபெற்ற சர்வதேச அருங்காட்சியக கண்காட்சி தொடக்க விழாவில் பிரதமருடன் மத்திய அமைச்சர் கிஷண் ரெட்டி, இணையமைச்சர் அர்ஜுன்ராம் மேக்வால்.

**கடமைப் பாதையின் வரைபடம் அறிமுகம்:** தில்லியில் உள்ள ராஜபாதை பகுதி ரைசினா ஹில்ஸ் பகுதியில் இருந்து இந்தியா கேட் பகுதியை இணைக்கிறது. இதன் பெயர் 'கர்த்தவ்ய பாதை' (கடமைப் பாதை) என்று கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் மாற்றப்பட்டது. இந்நிலையில் பிரகதி மைதானத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கடமைப் பாதையின் பாக்கெட் வரைபடத்தை பிரதமர் அறிமுகம் செய்து வைத்தார்.

கடமைப் பாதை பகுதியில் அமைந்துள்ள கோட்டா ஹவுஸ், ஹைதராபாத் ஹவுஸ், ஜெய்பூர் ஹவுஸ் உள்பட பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்தில் கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் தொடர்பான தகவல்கள் இந்த வரைபடத்தில் இடம்பெற்றுள்ளன. அதேபோல் அங்குள்ள கலாசார முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகள், மத்திய கலாசார அமைச்சகத்தின் கட்டுப்பாட்டில் உள்ள அமைப்புகள் ஆகியவற்றின் தகவல்களும் இடம்பெற்றுள்ளன.

இந்த வரைபடத்தில் இடம் பெற்றுள்ள மாநில இல்லங்களில் ஹைதராபாத் ஹவுஸ் கட்டடமானது வெளிநாட்டுத் தலைவர்களை வரவேற்று விருந்தளிக்கும் பகுதியாக உள்ளது. ஜெய்பூர் இல்லத்தில் நவீன கலைகளுக்கான தேசிய காட்சியகம் அமைந்துள்ளது. பிகானீர் ஹவுஸ் பகுதியானது கலாசார மையமாகத் திகழ்கிறது.

EVA ST

# பிகாரில் ஜாதிவாரி கணக்கெடுப்பு நிறுத்தம்: உயர்நீதிமன்ற உத்தரவுக்கு தடை விதிக்க உச்சநீதிமன்றம் மறுப்பு

**புது தில்லி, மே 18:** பிகார் மாநிலத்தில் ஜாதிவாரி கணக்கெடுப்புக்கு இடைக்காலத் தடை விதித்த பாட்னா உயர்நீதிமன்ற உத்தரவுக்கு தடை விதிக்க உச்ச நீதிமன்றம் வியாழக்கிழமை மறுப்பு தெரிவித்தது.

'கணக்கெடுப்பு என்ற பெயரில் நடத்தப்படும் இந்த நடவடிக்கை மக்கள்தொகை கணக்கெடுப்பா என்பதை ஆய்வு செய்வேண்டும்' என்றும் நீதிபதிகள் அப்போது தெரிவித்தனர்.

பிகாரில் ஜாதிகள் அடிப்படையிலான பொருளாதார கணக்கெடுப்பு இரண்டு கட்டங்களாக நடத்தப்பட்டு வந்தது. முதல் கட்டமாக ஜனவரி 17 முதல் 21-ஆம் தேதி வரை கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. இரண்டாம் கட்ட கணக்கெடுப்பு கடந்த ஏப்ரல் 15-ஆம் தேதி தொடங்கி நடைபெற்று வந்தது.

இந்த கணக்கெடுப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து பாட்னா உயர் நீதிமன்றத்தில் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. அதில், 'மாநிலத்தில் நடத்தப்பட்டு வரும் ஜாதிவாரி கணக்கெடுப்புக்குத் தடை விதிக்கவும், சேகரிக்கப்பட்ட தகவல்களை மறுஉத்தரவு வரும் வரையில் வெளியிட அனுமதி மறுக்க வேண்டும்' என கோரிக்கை விடுக்கப்பட்டது.

மேலும், 'இந்த கணக்கெடுப்பில் திருநங்கைகள் தனியொரு ஜாதியாகப் பிரித்து அவர்களின் தனி அடையாளம் சமரசம் செய்யப்பட்டுள்ளது.

திருநங்கைகளைப் பிற்படுத்தப்பட்ட வகுப்பில் சேர்க்க தகுதிகள் உள்ளபோதும், இல்லாத ஜாதிப் பிரிவை உருவாக்கி அதில் அவர்களைச் சேர்த்ததற்கு எந்தக் காரணமும் இல்லை. இது பாரபட்சமான நடைமுறை' என்றும் மனுதாரர் தரப்பில் வாதிடப்பட்டது.

இந்த மனுவை கடந்த 4-ஆம் தேதி விசாரித்த உயர் நீதிமன்றம், 'ஜாதிவாரி கணக்கெடுப்பு நடத்த மாநில அரசுகளுக்கு சட்டப்படி அங்கீகாரம் இல்லை என்பதில் நீதிமன்றம் உறுதியாக உள்ளது. மாநில அரசு கையிலெடுத்துள்ள இந்த விவகாரம் நாடாளுமன்றத்தின் உரிமையைப் பறிக்கும் வகையில் உள்ளது. மேலும், இந்த கணக்கெடுப்பில் சேகரிக்கப்பட்ட மக்களின் தகவல்களை பாதுகாக்க அரசு முறையான நடவடிக்கை எடுக்கவில்லை. மேலும், இத்தகைய கணக்கெடுப்பு நடத்துவதற்கான தேவை குறித்து அரசு தெரிவிக்கவில்லை. எந்தவொரு விளக்கத்தின் மூலமாகவோ இந்தக் கணக்கெடுப்பை அரசு நியாயப்படுத்த முடியாது' என்று கூறி, ஜாதிவாரி கணக்கெடுப்புக்கு இடைக்காலத் தடை விதித்தும், வழக்கின் அடுத்தகட்ட விசாரணையை ஜூலை 3-ஆம் தேதிக்கு ஒத்திவைத்தும் உத்தரவிட்டது.

இந்த உத்தரவை எதிர்த்து பிகார் அரசு தரப்பில் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டது. இந்த மனு உச்சநீதிமன்ற நீதிபதிகள் அபய் எஸ்.ஓகா, ராஜேஷ் பிண்டல் ஆகியோர் அடங்கிய அமர்வு முன்பு வியாழக்கிழமை விசாரணைக்கு வந்தது.

மனுவை விசாரித்த நீதிபதிகள், 'உயர் நீதிமன்றத்தில் இந்த வழக்கு விசாரணை வரும் ஜூலை 3-ஆம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. எனவே, இந்த வழக்கில் எந்தவொரு இடைக்கால நிவாரணத்தையும் உச்ச நீதிமன்றம் வழங்கப் போவதில்லை என்பதை தெளிவுபடுத்த விரும்புகிறோம்.

மேலும், இந்த மனுவை விசாரணைக்காக ஜூலை 14-ஆம் தேதிக்கு பட்டியலிடுமாறு அறிவுறுத்துகிறோம்.

இந்தத் தேதிக்கு முன்பாக, உயர் நீதிமன்றத்தில் விசாரணை தொடங்கப்படாவிட்டால், மனுதாரரின் வழக்குரைஞரிடம் விளக்கத்தை சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தப்படும்' என்று உத்தரவிட்டனர்.

# காதி பொருள்கள் விற்பனை 9 ஆண்டுகளில் 300% அதிகரிப்பு

**புது தில்லி, மே 18:** காதி மற்றும் கிராமப்புற தொழில் நிறுவனத்தின் விற்பனை கடந்த 9 ஆண்டுகளில் 332 சதவீதம் அதிகரித்துள்ளது.

கடந்த 2019-ஆம் ஆண்டு பிரதமர் மோடி பதவியேற்ற பிறகு காதி மற்றும் கிராமப்புற உற்பத்திப் பொருள்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு வருகிறது.

பிரதமரும் தனிப்பட்ட முறையில் இது தொடர்பாக பல்வேறு சூழ்நிலைகளில் மக்களுக்கு கோரிக்கை விடுத்து வருகிறார்.

இந்நிலையில் கடந்த 9 ஆண்டுகளில் காதி மற்றும் கிராமப்புற தொழில் நிறுவனத்தின் விற்பனை வெகுவாக அதிகரித்துள்ளதாக புள்ளிவிவரங்கள் வெளியாகியுள்ளன.

இதன்படி, காதி நிறுவனத்தின் விற்பனை கடந்த 2013-14-ஆம் ஆண்டில் ரூ.1,081.04 கோடியில் இருந்து, 2022-23-இல் ரூ.5,942.93 கோடியாக அதிகரித்துள்ளது. இது 450 சதவீதம் உயர்வாகும். கிராமப்புற தொழில் நிறுவனத்தின் விற்றுமுதல் ரூ.30,073.16 கோடியில் இருந்து, 2022-23-இல் ரூ.1,28,686.98 கோடியாக அதிகரித்துள்ளது. இது 327.91 சதவீத அதிகரிப்பாகும்.

ஒட்டுமொத்தமாக காதி மற்றும் கிராமப்புற தொழில் நிறுவனத்தின் விற்பனை ரூ.31,154.20 கோடியில் இருந்து,ரூ.1,34,629.91 கோடியாக அதிகரித்துள்ளது. இது 332.14 சதவீத உயர்வு என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

EVA STALIN IAS ACADEMY

**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
**https://www.evastaliniasacademy.in/**
**Contact Number - +91-8678969915, +91-9940332851**